கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

புரட்டாதி மாத இதழ்
NEWS BULLETIN
SEPTEMBER 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
04/10 – 16/11	Meadow Park School ல் தமிழ்ப் பாடசாலை, கலைப்பாடங்கள் கராத்தே, 11+ வகுப்புகள் நடைபெறும்
22/11/ 2025	45 Blondvil St Coventry CV3 5EQ ல் தமிழ்ப் பாடசாலை நடைபெறும்
19/10/ 25	காலை 11 மணிக்குக் கலைப் பாடப் பெற்றோர் கலந்துரையாடல்

SATURDAY	Time
Tamil	9.45am-12.30pm
Free Karate (Mr. Prathith Piries)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Vocal (Carnatic) (Mr. Dheenadayalan Pathmanathan)	12.30pm – 2.30pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	1.00pm – 5.00pm
Free 11plus Verbal & Nonverbal (Mrs. Gayathri Kirish)	2.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri Jeyaseelan)	11.00am – 3.00pm
Vocal (Carnatic) (Mrs. Vanathy Sureskumar)	9.00am – 1.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	11.30am –12.30pm
Miruthangam (Mr.Wijayarajah Mayilvaganam)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani Saravanathasan)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Tamil	11.30am –12.30pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar Devaraj)	10.00am –12.00am
Free 11plus Maths (Mr.Krish)	9.00am – 11.00am




முக்கிய அறிவித்தல்


தமிழ்ப் பாடசாலையானது எதிர்வரும் சனிக்கிழமை **04/10/25** முதல் **16/11/25** வரையும் Meadow Park School (Whitley Academy) Abbey Rd, Coventry CV3 4BD யில் நடைபெறும் என்பதையும் **22/11/25** முதல் மீண்டும் வழமைபோல் 45 Blondvil St Coventry CV3 5EQ முகவரியில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.



We would like to inform everyone that Tamil School will be held from next Saturday **04/10/25** to **16/11/25** at Meadow Park School (Whitley Academy) Abbey Rd, Coventry CV3 4BD and will resume as usual from 22/11/25 at 45 Blondvil St Coventry CV3 5EQ.



பேருந்தில் வருபவர்களுக்கு
For those coming by bus
13 21 21A 21S 25 60 ஆகிய பேருந்துகள் Riverside Close, London Road Tonbridge road என்னும் தரிப்பிடங்களினூடாகச் செல்கின்றன.



BUSES 13 21 21A 21S 25 AND 60 STOP AT LONDON ROAD TONBRIDGE ROAD.
BUSES 13 21 21A 25 AND 60 STOP AT LONDON ROAD RIVERSIDE CLOSE.

தமிழ்ப் பாடசாலையின் வாணிவிழா

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையான கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் வாணி விழா, 27/09/2025 சனிக்கிழமையன்று தமிழ்ப் பாடம் பயிலும் மாணவர்களுக்கும், 28/09/2025 ஞாயிற்றுக்கிழமையன்று கலைப்பாடங்களைப் பயின்று வருகின்ற மாணவர்களுக்கும் நடைபெற்றது.



வாணிவிழாவின் பூசையினைத் திரு பிரசாத் கணேசையா அவர்கள் மிகவும் சிறப்பாகச் செய்திருந்தார். கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான "நுண்கலைமானி" ஸ்ரீமதி வானதி சுரேஸ்குமார் அவர்கள், சகலகலாவல்லிமாலை, பஞ்சபுராணம் ஆகியவற்றைப் பாடியிருந்தார்.



நவராத்திரி பற்றிய உரையினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு கந்தையா அரியரத்தினம் ஐயா, சிரேஷ்ட உபதலைவரும், தமிழாசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன், தலைமையாசிரியை திருமதி ரஜனி உதயசேகரன், திரு பிரசாத் கணேசையா, பரதநாட்டிய ஆசிரியர்களில் ஒருவரான திருமதி சத்தியகௌரி ஜெயசீலன், தரம் 7 மாணவி செல்வி திவ்யா நக்கீரன் ஆகியோர் வழங்கியிருந்தனர். .



அத்துடன் தமிழ்த்திறன் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





ஞாயிற்றுக்கிழமை பல புதிய மாணவர்கள் கலைப் பாடங்களில் இணைந்து கொண்டு, தமது கலைப் பயணத்தை இனிதே ஆரம்பித்தனர்.



ஈழக்கந்தன் ஆலயத்தில் நடன நிகழ்வு

23/092025 அன்று கொவன்றி ஈழக்கந்தன் சந்நிதியில் நடைபெற்ற நவராத்திரி விழாவில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் பரதநாட்டிய ஆசிரியர்களில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "நுண்கலைமானி" ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி வைஷாலி காண்டீபன், செல்வி ஆராதனா ரமேஸ், செல்வி இதயனி இதயகுமார் ஆகியோர் மூன்று பாடல்களுக்கு நடன நிகழ்வை வழங்கியிருந்தனர்.



கொவன்றி ஈழக்கந்தன் ஆலய நிர்வாகத்தினரால் ஆசிரியரும், மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



பெற்றோர் கலந்துரையாடல்

பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் 21/09/2025 சனிக்கிழமையன்று மதியம் 12 மணிக்குத் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்றது. தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சி குறித்தும், நடைபெற்ற விளையாட்டு விழா, மற்றும் நடைபெறவிருக்கும் ஆண்டு விழா, மற்றும் பல விடயங்கள் கலந்துரயாடப்பட்டன.









ஈழத்துப் புலமைகள் 31

ஈழத்தமிழர் வரலாற்றினை ஓர் ஆவணமாக தொகுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாகவே எமது புலவர்களினதும், அறிஞர்களதும், வரலாற்றினையும், அவர்தம் படைப்புகளையும் காலவாரியாக ஆய்வு செய்து அவற்றை தொகுத்து எழுதி வருகின்றேன்.

முன்பு என்னால் முடிந்தவரையிலும் சேகரிக்கப்பட்ட குறிப்புகளினூடாக ஆவணங்களைத் தொகுத்து ஆராய்ச்சிக் கட்டுரையாக வெளியிட முயற்சி செய்தேன். ஆனால் மிக அண்மைக்கால அல்லது எமது சமகால நூல்களையோ நாவல்களையோ ஆய்வு செய்வது விஷம் கலந்த தேனைப் பருகுவது போல் அமையுமென நம்புகிறேன். அது மிகப் பலத்த விமர்சனங்களைத் தரலாம் எனக் கருதுகிறேன்.

ஆகவே பிரித்தானியர் ஆட்சிக்காலத்தை அண்மித்த 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை மட்டுமே இத்தொடரில் வெளியிட முயற்சிக்கிறேன். இதுவரை ஆய்வுகளையோ, ஒப்பீடுகளையோ குறிப்பிடாமல் சுருக்கமான வரலாற்றுப் பதிவாகவே தந்திருக்கிறேன். இனிவரும் காலங்களில் ஆய்வுகளையும் ஒப்பீடுகளையும் வெளியிடவிருக்கிறேன். .....

கடந்த இதழிலே!!

யாழ்.கோவையூர் அம்பலவாண பண்டிதர் பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

இவ்விதழிலே;

பீதாம்பரம் புலவர் பற்றி பார்ப்போம்.

யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியில் சண்முகம்பிள்ளை அவர்களின் மகனாக 1870 ஆம் ஆண்டளவில் பிறந்தார். ஏறத்தாழ 155 வருடங்களுக்கு முன்பு பிறந்தார். இவர் தெல்லிப்பழையில் இருந்த மிஷனரி ஆங்கில பாடசாலையில் ஆங்கிலக் கல்வியைக்கற்று பின்னர் இரும்பாலை சேனாதிராய முதலியாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

கவித்துவத்தில் கலம்பகம் பாடுவதிலும்; வெண்பாக்கள் எழுதுவதிலும் திறமை படைத்தவராக இருந்தார். இவர் பாடிய பிரபந்தங்களில் பிரபலமானவற்றை இங்கே பார்ப்போம்.

மறைசைக் கலம்பகம் மறைசைத் திருப்புகழ்; நீர்வை வெண்பா; வல்லி புரநாதர் பதிகம் என்பன சிறந்தவை. இலக்கியச்சுவைக்காக சில செய்யுள்களைக் காண்போம்;

மறைசை கலம்பகம்

மேவு மலை மானை விழைவோடிடம் வைத்து-
வாவுமலை வானைக் குடிவைத்தவா-
காவகமேல் வந்துவழங் கும் மறைசை
வானவா வாழ்த்தெனக்கு வந்து
வளங்குன்றான் மலர் “

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்

திரு. மாணிக்கம் தவத்துரை ஆசிரியர்.



